# PGTRB தேர்வுக்கு படிப்பவர்களுக்கான TIPS

இனி வரப்போகும் முதுகலை பட்டதாரி ஆசிரியர் (PG-TRB) தேர்வுக்கு படிக்கும் நண்பர்களே

1. முதலில் உங்கள் பாடதிட்டத்தை டவுன்லோடு செய்து கொள்ளுங்கள். அது கல்வி சம்பந்தப்பட்ட பல வெப்சைட்களில் இருக்கும்.

2. அந்த பாடத்திட்டத்திற்கு ஏற்ற புத்தகங்களை வாங்குங்கள். புத்தகங்களின் விலை அதிகமாக உள்ளது என்று கவலைப்பட வேண்டாம். நல்ல புத்தகங்கள் உங்கள் மாவட்ட தலைமை நூலகத்தில் உள்ளன. அவற்றை பயன்படுத்தி கொள்ளுங்கள்.

3. பாடத்திட்டம் 10 யூனிட்களை கொண்டு இருந்தால் அதற்கேற்ப நோட்டு புத்தங்களை வாங்கி கொள்ளுங்கள்.

4. ஒரு யூனிட்டில் இருக்கும் முதல் தலைப்பை நீங்கள் வைத்து இருக்கும் புத்தகத்தில் தேடி படியுங்கள். படித்ததை நீங்கள் போட்ட யூனிட் அடிப்படையிலான நோட்டில் குறிப்பு எடுத்து கொள்ளுங்கள். பின்னர் அதே தலைப்பை இணையதளத்தில் தேடுங்கள். புத்தகங்களில் இல்லாத பல விவரங்கள் இணைய தளங்களில் உள்ளன. அத்தகைய விவரங்களையும் நோட்டில் குறிப்பேடுத்து கொள்ளுங்கள்.

5. மேற்கண்டவாறு அனைத்து யூனிட்களையும் படியுங்கள்.

6. எஜுகேஷனல் சைக்காலஜியை பொறுத்தவரை உங்கள் பி.எட்., புத்தகங்களே போதுமானது.

7. பொது அறிவு பற்றிய 10 வினாக்களுக்கு உரிய விடை அளிக்க இப்போதிலிருந்தே பத்திரிக்கைகளை படிக்க தொடங்குங்கள்.

நீங்கள் படிக்க தொடங்குங்கள். தேர்வு அறிவிப்பு வரும் போது வரட்டும். இப்போதே ஆரம்பித்தால் தான் வெற்றி உங்கள் கை வசமாகும்.